New Science Academy
In front of B.M.C Jaffna.
DAY CLASS
Mon to Fri
7.30 - இரசாயனசமநிலை
12.30 ஓட்சிசன் சேர்வைகள்
1 30 P- தொகுப்பு மூலகங்கள்
By சண்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New Science Academy
In front of B.M.C. Jaffna.
DAY CLASS
Mon to Fri
ZOOLOGY
தங்கராஜா
7.30 - Economic Zoology

சுடர் 5: சுக்கில ஸ்ரீ பங்குனி மீ 28 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 றமழான் பிறை 13 (10-04-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 56

# கிழக்கு நிலைமை பற்றி நேற்று அரசு-புலிகள் பேச்சுவார்த்தை

## திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளர்களும் பங்குபற்றினர்

கொழும்பு, ஏப்ரல் 10

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் நேற்றிரவு மீண்டும் ஆரம்பமாகின.

நேற்றைய பேச்சுக்களின் போது கிழக்கு மாகாண நிலைமை பற்றி முக்கியமாக ஆராயப்பட்டதாக தெரிய வந்தது.

இந்தப் பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளோடு திருமலை, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளின் அரசியற் பொறுப்பாளர்களும் பங்குபற்றினர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) தலைமையிலான விடுதலைப் புலிகள் குழு நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்தது.

இத்தக் குழுவில் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நேற்றிரவு நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அரசாங்கத் தரப்பில் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், முன்னணியின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட அரசியற் பொறுப்பாளருமான திரு கரிகாலன், திருகோணமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. ரூபன், அம்பாறை மாவட்ட அரசியற்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைத் தளபதிகளுடனும் இன்று காலையில் சந்திப்பு!

கொழும்பு, ஏப். 10

ஸ்ரீலங்காவின் முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மாஅதிபர் ஆகியோருடனும் விடுதலைப்புலிகளின் உயர் மட்டக்குழு இன்று காலையில் பேச்சுவார்த்தை நடத்தும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டுவது தொடர்பாக எவ்வாறுசெயற்படுவது என்பது குறித்து இன்றைய சந்திப்பின்போது கலந்துரையாடப்படும் எனக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஜனாதிபதி-புலிகள் இன்று பேச்சு!

கொழும்பு, ஏப்ரல் 10

கொழும்பில் தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவுடன் இன்று நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தும் எனத் தெரியவருகிறது.

இந்தியப்படை இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னர் நடைபெறும் உயர்மட்ட சந்திப்பு என்பதால் இது முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளைத் தருவதாக அமையக் கூடும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவருமான திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) இந்தச் சந்திப்பில் நேரடியாகப் பங்குபற்றுவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். (உ)

## 2 மாதத்தின் பின்னரே!

கொழும்பு, ஏப் 10

பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான அடிப்படைத்தகுதிப் புள்ளிகள்பற்றி அறிவிக்க இன்னமும் இரண்டு மாதங்கள் எடுக்கும்.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல வெளியிட்டார். (ஒ-எ)

## பதுளை பஸ் குடைசாய்ந்து 2 தமிழர் உட்பட மூவர் பலி

### 26 பயணிகள் படுகாயமுற்றனர்

கொழும்பு, ஏப். 10

நேற்று முன்தினம் மாலை வெலிமடையிலிருந்து பதுளைக்குச் சென்ற பயணிகள் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் குடைசாய்ந்ததில் மூவர் உயிரிழந்தனர் 26 பேர் படுகாயமுற்றனர்.

படுகாயமுற்றவர்களில் பலர் பதுளை ஆஸ்பத்தியில் ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த மூவரில் இருவர் தமிழர்கள் என்றும், அவர்களில் ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபிள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கொள்ளைக் கோஷ்டியில் ஏ. எஸ். பி.

நீர்கொழும்பில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸார் ஒரு கோஷ்டியைக்கைதுசெய்தனர்

அந்தக் கோஷ்டியைச்சேர்ந்தவர்களில் ஒருவர் முன்னாள் உதவிப் பொலீஸ் அதிபர் (ஏ. எஸ். பி) என்பது தெரிய வந்தது.

இவர் ஏற்கனவே பொலீஸ் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டவராவார். [ஒ-எ]

## மரவள்ளி சாப்பிட்ட அறுவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

மரவள்ளிக்கிழங்கை அவித்து மதிய உணவாகச் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் வாந்தியும் வயிற்றுப் போக்கும் ஏற்பட்டதனால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த செ. தங்கமுத்து(வயது 60) க. சஜந்தினி (வயது 16), திருமதி பு. சந்தசாமி (வயது 39), க.சுகந்தினி (வயது 13), க. சுதர்ஷன் (வயது 11), க. ஜெபர்ஷன் (வயது 9) ஆகியோரே அந்த அறுவரும் ஆவர்.

மரவள்ளிக்கிழங்கை பிறந்து வைக்காமல் மூடிவைத்து அவித்ததனால் கிழங்கில் உள்ள ஒருவகைப் பதார்த்தம் நஞ்சாக (சைனட்டாக) மாறியதனாலே இவ்வாறு ஏற்பட்டதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ 6)

### சுப நேரம்

10-04-1990
செவ்வாய்க்கிழமை பங்குனி28
சுபநேரம்:
10-36முதல் 12-06வரை
இராகுகாலம்
03-06 முதல் 04-36 வரை

### போக்குவரத்து தினம்:

## யாழ். பஸ் நிலையத்தில் வியாழன் கோலாகல விழா

### ஷப்றா - உதயன் ஆதரவுடன்

யாழ்ப்பாணம். ஏப்ரல் 10

வடபிராந்திய போக்குவரத்துச் சபை, ஷப்றா - உதயன் ஆதரவுடன் நாளைமறுதினம் வியாழக்கிழமை (12 ஆம் திகதி) மாலை 4 மணிக்கு தேசிய போக்குவரத்து தினவிழாவை யாழ் மத்திய பஸ் நிலையத்தில் கோலாகலமாக நடத்தவிருக்கிறது.

போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. சி. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும், கௌரவ விருந்தினராக ஷப்றா நிதி நிறுவனத்தின் யாழ்கிளை இயக்குநரும், உதயன் வெளியீட்டகத்தின் நிர்வாகஇயக்குநருமான திரு. ஈ. சரவணபவனும் கலந்து கொள்வார்கள்.

விழா நிகழ்ச்சி நிரல் வருமாறு:

பி. ப. 4 மணி:- மங்கள விளக்கேற்றல் — யாழ் அரச

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ஈ. பி. ஆர். எல். எவ் அமைச்சர் கூறுகிறார்:

## ரஞ்சன் பாதுகாப்புத் தந்தால் மாகாண சபையைக் கூட்டலாம்!

### நிபந்தனையற்ற பேச்சுக்கும் அரசுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 10

வடக்கு, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா உறுதி செய்வாரானால் வடக்கு, கிழக்கு மாகாண சபையை மீண்டும் கூட்டுவதில் எந்தவித பிரச்சினையுமில்லை.

மாகாணசபை அமைச்சர் ஜனாப். எம். கே. அபுயூசுப் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபை சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்டது.

அதனால் அந்தச் சபையையும் அதன் உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கிறது என்பதை இலங்கை அரசு மறந்து விடக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

ஜனாப். அபுயூசுபுடன் இந்த மாநாட்டில் மட்டக்களப்பு எம். பி. திரு சாம் தம்பிமுத்துவும் பங்கு பற்றினார்.

பத்திரிகையாளர் மாநாட்டில்வைத்து ஜனாப் அபுயூசுப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### மாகாணசபை 7 ஆம் திகதி கூடும்?

லண்டன், ஏப். 10

வடக்கு, கிழக்கு மாகாண சபைக் கூட்டத்தை எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக பி. பி. ஸி நேற்றிரவு அறிவித்தது. (உ-9)

### அன்னை பூபதி நினைவாக

## இன்று நல்லூரில் உண்ணாவிரதம்; 19 இல் மாபெரும் எழுச்சி ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

தமிழ் மக்களின் விடிவுக்காக தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதி நினைவாக இன்று காலை 8. 30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

இந்த உண்ணாவிரத நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்களும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.ஸ்டான்லிடொமிவிக் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அன்னை பூபதியின் நினைவாக நேற்று முதல் 19 ஆம் திகதி வரை எழுச்சித் தினங்களாக அறிவித்துள்ளோம். இதன் முதல்படியாக இன்று காலை 8.30 தொடக்கம் மாலை வரை நல்லூரில் உண்ணாவிரதம் நடைபெறும்—

அதைத் தொடர்ந்து நாளை முதல் கிராமம் கிராமமாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது—

19 ஆம் திகதி யாழ்நகரில் எழுச்சி ஊர்வலம் ஒன்றை நடத்துவதுடன், நல்லூரில் மாபெரும் எழுச்சிக் கூட்டம் ஒன்றையும் நடத்த இருக்கிறோம்—

பொது அமைப்புக்கள் இதற்குப் பூரண பங்களிப்பை அளிக்கவேண்டும் — என்று அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-3)

### முச்சந்தி முரளி



உந்தச் செய்தியை வாசிச்சுப் போட்டு சனங்கள் மரவள்ளி கிழங்கை சாப்பிடாமல் விட்டாலும் விட்டுடுங்கள்...!

### நோன்பு திறக்கும் நேரம்

ஸஹர் முடிவு — 4.30
நோன்பு திறக்கும் நேரம் 6.20

### இந்திய இராணுவ நடவடிக்கையால்

## யாழ். மாவட்ட சாலைகளுக்கு ரூபா இருபது கோடி நஷ்டம்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

இந்திய இராணுவ நடவடிக்கைகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள போக்குவரத்துச் சபை சாலைகளுக்கு 20 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

இத்தகவலை வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. சி. கனகரத்தினம் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்திய இராணுவம் முகாமிட்டிருந்த கோண்டாவில் சாலைக்கும் ஏனைய சாலைகளுக்குமே இந்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அலுவலக உபகரண வகையால் 2½ லட்சம் ரூபாவும்—

அலுவலக தளபாடங்கள் வகையால் மூன்று லட்சம் ரூபாவும் —

கட்டடங்கள் வகையால் 23 லட்சம் ரூபாவும் —

இயந்திரங்கள் வகையால் 2 லட்சம் ரூபாவும்—

வாகனங்கள் வகையால் 18 கோடி ரூபாவும் — நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவற்றுக்கான உதவிகளைப் பெற புனர்வாழ்வு அமைச்சுக்கு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டும் இதுவரை எந்த உதவியும் கிடைக்கவில்லை என்றும் திரு. கனகரத்தினம் மேலும் கவலைதெரிவித்தார். (ஒ-3)

### வடக்கு - கிழக்கு மாகாண சபை

## பதவி இழந்த செயலாளர்கள் குறித்து இன்னும் முடிவில்லை

திருகோணமலை, ஏப் 10

பதவி இழந்திருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபை அமைச்சுக்களின் முன்னாள் செயலாளர்களின் நிலைமை குறித்து அரசாங்கம் இன்னும் எந்த வித முடிவையும் மேற்கொள்ளவில்லை.

தற்போது இவர்களில் பெரும்பாலானோர் லீவில் நிற்பதாகக் கருதப்படுகிறது.

விரைவில் இவர்களுக்குரிய பதவிகள் குறித்து அரசாங்கம் முடிவு செய்யும்.

இத் தகவலை வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆளுநர் வட்டாரங்கள் தெரிவித்தன.

மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களாகக் கடமையாற்றியவர்களில் திரு. என் பத்மநாதன், திரு டி. வாமதேவன் ஆகியவர்கள் மாகாண சபையில் சேருவதற்கு முன்னர் தாங்கள் பணிபுரிந்த அமைச்சுக்களில் மீண்டும் சேர்ந்து உள்ளனர்.

டாக்டர் நச்சினார்க்கினியன், திரு. வி. என். சிவராஜா ஆகியோர் ஓய்வு பெறுவதற்கான விண்ணப்பங்களைச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் - இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Vauxall Viva R. Sri 8500 தொடர்பு எண் கொண்ட வொக்சோல்கார்[2ஆம் ஆள்] பாவனையிலுள்ளது உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு 83, பிரதான வீதி, 5 ஆம் குறுக்குத் தெருசந்தி யாழ்ப்பாணம். [12183]

பூரண விளை திறனுடைய பம்பாய் வெண்காய விதை ரம்பூர் சிகப்பு ரகம் விற்பனைக்கு உண்டு. கிலோ 375 ரூபா பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (3215)

### கோழிக்குஞ்சு விநியோகம் (UPLANDS FARM)

தனிச் சிகப்பு, கறுப்பு, நிற சேவல் (பிலிமத்)கறுப்பு புள்ளி சேவல் (LOHMAN) பிறவுண் சேவல், புறொயிலர்குஞ்சுகள், கறுப்பு, வெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 11-4-90 புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: இல-9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அருகில்) (3226)

### சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன் செப்/டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். மண்டேலா ரேடர்( புத்தக சாலை)இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

### மலிவு விற்பனை

இதோ அரிய சந்தர்ப்பம். ஸ்கேட், பிளவுஸ், லேடிஸ் கவுண், T-சேட், பேபிகவுண், பேபிசூட், மற்றும் றெடிமேட் உடைகளுக்கு விஜயம் செய்யுங்கள் (6. 4. 90 – 13. 4. 90 வரை) Fashion, Garments, 20,22, கடைச்சாமி வீதி,OFF நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3230)

### தவறிவிட்டது

வி. நாகேஸ்வரி என்பவரது பேர்சுடன் கூடிய அடையாள அட்டை இல. 396121484 V அளவெட்டி அம்பனை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர் தயது செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது வி. நாகேஸ்வரி, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் எனும். முகவரியில் ஒப்படைக்கவும். (3236)

மூக்குக் கண்ணாடி ஒன்று யாழ்ப்பாணம் சுன்னாகம் -மல்லாகம்-கட்டுவன் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். வாணி கல்வி நிலையம், சுன்னாகம். (3237)

### பரீட்சை

லண்டன்(Pitman) Typing Shorthand ஜூலைப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் 14-4-1990 இற்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். Bond Institutes 58,A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி/4268]

### வகுப்புகள்

Radio Tv Deck Air Cond-itioning Refrigeration வயறிங் வெல்டிங் வைன்டிங் பிளம்பிங்மோட்ட மெக்கானிஸம் Typing Spoken English புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழும் வழங்கப்படும் Vispa Engineering Aid Hall 328, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (12175]

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/4206]

### சேவை

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக் கொள்ளவும் பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும். நாடுங்கள்:, பாரத் வீடியோ சென்ரர் 51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/4256)

### புத்தக ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, ஜூனியர்விகடன், ஜூனியர் போஸ்ட், இதயம், குங்குமம், இந்தியா ருடே, (தமிழ் - ஆங்கிலம்)பொறின்லைன், ஸ்போட்ஸ்ரார், ஏனைய எல்லா இலங்கை இந்திய சஞ்சிகைகளும். மீண்டும். பதிவு செய்யப்படுகின்றன. V.P. யிலும் பெறலாம். ஸ்ரீகாந் புத்தக சாலை. இல 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (சி/4227)


## பிரிவுபசாரம்

பச்சிலைப்பள்ளி ஏப். 10 சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளராகக் கடமையாற்றிய வி. எஸ். சண்முகநாதன் கடந்த மாதம்இளைப்பாறியதை அடுத்து இவரின் இடத்திற்கு ரி. தர்மநாயகம் முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இளைப்பாறிச்சென்ற வி. எஸ் சண்முகநாதனுக்கு வங்கி வாடிக்கையாளர்களும் ஊழியர்களும் இணைந்து பிரிவுபசாரவிழா ஒன்றை நடத்தினார்கள். க—11


## அந்தியேட்டி அழைப்பு

### திருமதி துரைராசா கனகம்மா

இறப்பு: 15 — 03 — 1990

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்டவருமான துரைராசா கனகம்மா பருத்தித்துறையில் 15 - 03 - 90 காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வெள்ளிக்கிழமை 16 - 03 - 90 பருத்தித்துறையில் நடைபெற்றது.

இவர் காலம் சென்ற சிவசம்பு கணக்கரின் மகளும் காலம் சென்ற முன்னாள் P. W D ஓவசியர் துரைராசாவின் அருமை மனைவியும், திருமதி தையல்நாயகி PAGE (Canada) திருமதி செல்லம் இரத்தின சபாபதி, திருமதி ஞானம் நமசிவாயம், பருத்தித்துறை சின்னபிள்ளையார் உரிமையாளர் சிவசம்பு ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியைகளும் 12 - 04 - 90 வியாழக்கிழமை எனது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

து. சிவசம்பு

''சிவாலய''
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

[3155]


# அன்னை பூபதியை மரணித்த ஒருவராகக் கருதமுடியாது

## கோப்பாய்க் கூட்டத்தில் உரை

கோப்பாய் ஏப்ரல் 10

அன்னை பூபதியை மரணித்த ஒருவராக நாம் கருதக் கூடாது. அந்த மாதரசி சமாதானத் தூதுவராக வந்து சமாதான தேவதையாகத் திகழ்கிறார்.

அன்னை பூபதி நினைவாக கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் முன்றலில் நடைபெற்ற அடையாள உண்ணா விரத வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. கோ. முத்துலிங்கம் தமற் கண்டவாறு தெரிவித்தோர்.

அவர் மேலும் பேசியதாவது :-

அன்று அன்னை கூறினார் ''போரை நிறுத்து பேச்சு வார்த்தை செய்'' என்று.

ஆனால் இந்திய அரசு இதனை உதாசீனம் செய்தது. இலங்கை இதற்கு மதிப்பளித்ததால் இன்று சமாதானம் நிலவுகிறது.

எனவே அன்னையர் ஒரு தீர்க்கதரிசி.

இன்று மரண பயம் நீங்கி மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆன்மீக பலம் பொருந்திய அன்னையினது பங்களிப்பு உரிமை போராட்டத்திற்கு உரமிட்டுள்ளது.

அன்னை தமிழ் மக்கள் நெஞ்சங்களில் அணையாத் திபமாக என்றும் ஒளி விடுவார் என்பதில் ஐயமில்லை.

இப்படி அவர் கூறினார்.

மற்றும் செ. செல்வரத்தினம், இ. இராசரத்தினம் கோப்பாய் விடுதலைப் புலி மக்கள் முன்னணி பொறுப்பாளர் பாலா, வலிகாமப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ-72)

# 79 இல் போட்டிப் பரீட்சை; தற்போது தான் பயிற்சி!

யாழ்ப்பாணம் ஏப் 10

நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சை 79 ஆம் ஆண்டு நடைபெற்றபோது பதவி உயர்வுக்கான பயிற்சி தற்போதே நடைபெறுகிறது.

நாட்டில் நிர்வாக அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவிய போதும், 79 ஆண்டு போட்டிப்பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்படவில்லை.

போட்டிப் பரீட்சையில் தோற்றியவர்களில்41பேருக்கு கடந்தவாரம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் 1½ மாதப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த 41 பேரில் ஒருவர் மட்டுமே தமிழர். மீதமானவர்கள் சிங்களவர்கள்.

பயிற்சி முடிந்தபின் இவர்கள் நிர்வாக அதிகாரிகளாக நியமனம் செய்யப்படவுள்ளனர். (இ-3)

# விடுதலைப் போராட்டத்தில் அன்னை பூபதிக்கு முக்கிய இடம்

## கனகபுரம் சிற்றூரவை செயலர் பேச்சு

கிளிநொச்சி, ஏப் 10

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக சாத்வீகரீதியில் போராடி உயிர் நீத்த முதல் தமிழ்ப் பெண்மணி அன்னை பூபதிகணபதிப்பிள்ளைஆவர். அதுமட்டுமல்ல உலகில் உண்ணா நோன்பிருந்து மரணித்த முதல் பெண்மணியும் அவரே. அந்த வகையில் விடுதலைப் போராட்டத்தில் அன்னை பூபதி முக்கிய இடம் பெற்றுவிட்டார்.

அன்னை பூபதி நினைவாக கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலில் அனுஷ்டிக்கப்பட்ட உண்ணா விரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கனகபுரம் சிற்றூரவைச் செயலாளர் திரு. மு. சிவரெத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. கே.வி.கே. திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற உண்ணா விரதத்தை திரு. எஸ். சரவணபவன் தாகசாந்தி வழங்கி முடித்து வைத்தார்.

கனகபுரம் சிற்றூர் அவைத் தலைவர் திரு. சி. கனகேந்திரம் பேசுகையில்:

தியாகத் தாய் அன்னை பூபதியின் பெயர் என்றும் தமிழ் மக்களின் உள்ளங்களில் இருந்து அழியாது — என்றார்.

கொத்தணி அதிபர் திரு. நா. சோதிநாதன் பேசுகையில் அன்னை பூபதி மூட்டி விட்டுச் சென்ற விடுதலைத் தீ இன்னும் அணையவில்லை என்றார்.

கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. இராசநாயகம், திரு. கந்தசாமி, திரு. நா. சண்முகம், திரு. பா. குலசிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் அங்கு உரையாற்றினர். [ஒ]

# திட்ட அமைச்சர்களும் அமைச்சர்கள் ஆனார்கள்!

கொழும்பு, ஏப்10

திட்ட அமைச்சர்களும் இனிமேல் அமைச்சர்கள் என்றே அழைக்கப்படுவர்.

'திட்ட' என்ற வார்த்தை கைவிடப்படுகிறது.

அமைச்சர்கள் என்று அவர்கள் அழைக்கப்பட்டாலும், 'கபினட்' அந்தஸ்து உள்ள அமைச்சர்களாக அவர்கள் கருதப்படமாட்டார்கள்.

இந்த அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் திட்டங்களுக்கு அவர்களே முழுப்பொறுப்பு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இந்தப் பெயர் மாற்றத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

துணை அமைச்சர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் நாளாந்தக் கடமைகளைக் கவனிக்க வேண்டும் என்றும் விரயம், ஊழல் முதலியவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியினால் பணிக்கப்பட்டுள்ளனர்.

துணை அமைச்சர்கள் கொள்கை முடிவுகளை அரசுக்கு சிபார்சு செய்யலாம். (அ-எ)

# இடுப்பில் தங்கம்

கொழும்பு, ஏப். 10

48 தங்க பிஸ்கட்டுக்களை இடுப்புப் பட்டியில் மறைத்துக் கடத்த முயன்ற இளம் பெண் ஒருத்தியை, கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பிடித்தனர்.

இவர் பஹ்ரைனில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணிபுரிந்த பின்னர் தாயகம் திரும்பினார்.

கடத்தப்பட்ட தங்கத்தின் பெறுமதி 28 லட்சம் ரூபா என்று சொல்லப்பட்டது.

## கல்வியங்காடு விளையாட்டுப் போட்டி

கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கம் நடத்தவுள்ள சங்க விளையாட்டுக் கழக வருடாந்த மெய் வல்லுநர் போட்டிகளுக்கு முன்னோடியாக இம்மாதம் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று காலை 6 மணிக்கு ஆண்களுக்கான மரதனோட்டமும் இரு பாலாருக்குமான சைக்கிளோட்ட போட்டியும் விசேட நிகழ்ச்சிகளாக இடம்பெறும். இவற்றில் உள்ளூர் உறுப்பினர் மட்டுமே கலந்துகொள்ள முடியும் என சங்கம் தெரிவித்துள்ளது,

சங்கத்தின் வருடாந்த மெய் வல்லுநர் போட்டி இம்மாதம் 22 ஆம் திகதி ஞாயிறன்று சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (க)

## அனுதாபசெய்தி

யாழ்ப்பாணம், ஏப் 10

இலங்கை இந்து மாமன்றத்தின்செயலாளரும்யாழ். இந்து கல்லூரியின் பழைய மாணவறுமாகிய சட்டத்தரணிசெ. சச்சிதானத்தின் மறைவை யெட்டி யாழ். இந்து இளைஞர் பேரவை அனுதாபச் செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது. (க)

# குழந்தை வயிற்றோட்டம் கட்டுப்படுத்தக் கூடிய நோய்

## தாய்-சேய் நலன் கருத்தரங்கில் உரை

''குழந்தைகளிடையே ஏற்படும் வயிற்றோட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். நல்ல போஷக்குணவு, சுத்தமான நீர், பாதுகாப்பான சுற்றாடல் என்பவற்றுடன் கிராமிய ரீதியிலான சுகாதாரப் போதனை மூலம் இந்த நோய்களைத் தடுக்கலாம்''

அண்மையில் தம்பாட்டியில் போறூட் நிறுவன ஒத்துழைப்புடன் நடைபெற்ற தாய் சேய் நலக்கருத்தரங்கில் உரையாற்றிய ஊர்காவற்றுறை மேற்பார்வைச் சுகாதாரப்பரிசோதகர் திரு. ஏ. செல்லையா மேற் கண்டவாறுகூறினார்.

ஊர்காவற்றுறை மேற்பார்வைக் குடும்ப நலசேவையாளர் திருமதி அன்னம்மா தாய்-சேய் நலம் பற்றிக்குறிப்பிடுகையில் ''கர்ப்பகால மரணங்கள், சிசு மரணங்கள் இக்கிராமத்தில் இல்லாதது. தாய்மாரிடையே போதிய சுகாதார அறிவு உண்டென்பதைக் காட்டுகிறது. சிகிச்சை நிலையங்களுக்கு அவர்கள் ஒழுங்காக வந்து இவ்வறிவை மேலும் விருத்தி செய்து சுகாதாரக் குறைபாடுகளை நீக்க வேண்டும் எனக் கூறினார்.

மேற்படி சங்கத்தின் தலைவரது தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் போறூட் நிறுவன காரைநகர் பொறுப்பாளர் திரு. கணேசரெட்ணதாசன், போறூட் நிறுவன பிரதிநிதிகள், மாதர் சங்க உறுப்பினர், சங்க உறுப்பினர் ஆகியோர் பங்குபற்றினர்.

இறுதியில் பாடசாலைப் பிள்ளைகளுக்கான சிகிச்சை முகாம் நடைபெற்றது. (க)

## தேசிய விடுதலைப் போராட்டங்களில்

# ஈழத்தமிழருக்கு முதலிடம் தந்தது பிரபாவின் வழிநடத்தலே

## அன்னை பூபதி அஞ்சலிக் கூட்டத்தில் உரை

''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாவின் தீர்க்க தரிசனமும் திறமையான வழி நடத்தலுமே தேசிய விடுதலைப் போராட்டங்களில் ஈழத்தமிழருக்கு முதலிடம் பெற்றுத்தந்தன.''

விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணி வல்வை ரேவடிக் கடற்கரையில் அண்மையில் நடத்திய அன்னை பூபதி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய வடமராட்சி விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் குணம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''சாதிபேதமற்ற பெண்ணடிமை நீக்கப்பட்ட சமதர்ம சமுதாய மலர்ச்சிக்காக, சுயநிர்ணய அடிப்படை உரிமை பெற்ற சுதந்திர சோஷலிஸத் தமிழீழம் உருவாகுவதற்காக இதுவரை 1350 க்கும் அதிகமான போராளிகளும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் தமது இன்னுயிரை ஈந்துள்ளனர், என்றார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அமைப்பாளர் செங்கதிர் பேசுகையில் தமிழ் பேசும் மக்கள் பிரபாகரனின் தலைமையில் அணி திரண்டு உரிமைகளை வென்றெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கூட்டத்துக்கு தலைமை வகித்த திருமதி உஷா துரைராசா, யாழ் மாவட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் மாலினி ஆகியோர் அன்னை பூபதியின் அருந்தியாகத்தைப் பாராட்டிப் பேசினர்.

மக்கள் முன்னணி உறுப்பினர்களான சுந்தரி, ஸ்ரெனிஸ் மாஸ்ரர் ஆனந்தராசா, வ. இ. நடனசிகாமணி, அதிரூபசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். மகளிர்முன்னணி உறுப்பினர் லூஷியா நன்றியுரை வழங்கினார். (க-160)

# நாடக தயாரிப்பாளருக்கு உ. அரச அதிபர் பாராட்டு

காங்கேசன்துறை ஏப்ரல் 10

''பல்கலைக்கழக மட்டத்தில்'' காத்தவராயன் இசை நாடகம் மட்டுமல்ல, எமது பாரம்பரியக்கலைகளை எடுத்துக்காட்டும் பல இசை நாடகங்களும் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர். திரு. வை. இராசையா யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்களால் அளிக்கப்பட்ட ''காத்தவராயன்'' இசை நாடகத்தைப் பாராட்டி அதன் தயாரிப்பாளர் கலாநிதி. இ. பாலசுந்தரத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக முதல் நிலை விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் இப்பணியை மேலும் தொடர வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந் நாடகத்தை மேடையேற்றிய காங்கேசன்துறை நடமாடி நாடகமன்ற தலைவர் திரு. கே. வி. இராஜரத்தினத்திற்கும் அவர் பாராட்டு தெரிவித்துள்ளார். (க-68)

## குமுழமுனை மாணவர் சாதனை

முல்லைத்தீவு, ஏப்ரல் 10

சென்ற ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய குமுழமுனை மகாவித்தியாலய மாணவர்கள் அறுவர் பல்கலைகழக அனுமதி பெறத்தக்க வகையில் திறமையாகச் சித்தி எய்தியுள்ளனர்.

இவர்களுள் இரு மாணவிகள் மூன்று பாடங்களில் 'பி' தரத்திலான சித்தியையும் ஏனைய நால்வரும் குறைந்தது ஒரு பாடத்திலாவது 'பி' தரத்தில் சித்தியையும் பெற்றுள்ளனர்.

இப் பாடசாலை கடந்த கால வன்செயல்களின்போது மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தமை குறிபிடத்தக்கது(க)

# ஜீ.சி.ஈ. சாதாரண மாணவர்க்கும் உயர்கல்வி வழங்கத் திட்டம்

## தனிப்பல்கலைக்கழகம் உருவாகும்

கொழும்பு, ஏப்ரல்10

அனைத்து ஜீ. சி. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கும் பல்கலைக்கழகக் கல்வி கிடைக்கக்கூடியதான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் தற்போது இருக்கிறது.

இத் திட்டத்தின் படி ஒரு தனிப் பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

இலங்கையின் புதிய பல்கலைக்கழகம் (New University of Sri Lanka) என்று அதன் பெயர் இருக்கும்.

அதன் கீழ் தேசிய, மாகாண மட்டத்திலான இன்ஸ்டிடியூட்கள், கல்லூரிகள் அமைக்கப்படும்.

பல்கலைக்கழகத்துக்கு செனட் ஒன்று இருக்கும். ஜனாதிபதி பல்கலைக்கழக வேந்தராக இருப்பார். ஜனாதிபதி உபவேந்தர் ஒருவரையும் செனட் ஒன்றையும் நியமிப்பார்.

பாட விதானங்கள் தயாரிப்பு, பரீட்சைகள் நடத்துவது, பட்டங்கள் வழங்குவது ஆகியன உபவேந்தர் மற்றும் செனட்டினால் கையாளப்படும்.

சென்னை, பம்பாய், கேரளம், லண்டன் ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் இயங்குவது போன்று இப் புதிய பல்கலைக்கழகமும் இயங்கும்.

இப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயற்படும் கல்லூரிகள், இன்ஸ்டிடியூட்கள் இப் பல்கலைக்கழகத்தின் பரீட்சைகளுக்கு மாணவரைத் தயார் செய்யும்.

இளைஞர் அமைதியின்மை தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளின் அடிப்படையில் தான் புதிய யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## ஆங்கில மாணவர் மன்றம்

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆங்கில மாணவர் மன்றத்தை அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி அவர்கள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். மன்றத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்:- க. குமுதா, உப. தலைவர்:- என் ஆனந்தன், செயலாளர்:- சி. ராசமோகன், உப. செயலாளர்:- கே. றாசிதா, பொருளாளர்: -எஸ். மதிவதனா, பத்திராதிபர்:- பிருந்தா (க-31)


# கொம்பியூட்டர் கல்வி

Diploma in Computer Programming & Data Processing

BASIC - LANGUAGE

4 — மாதங்கள்

திங்கள், புதன் வகுப்புகள்

ஆரம்பம்: 18 — 04 — 90

10.30 மணி

FEES மாதம் 300/-மட்டுமே

மேலும் விபரங்களுக்கு:

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Leaders in Computer Education)
16, 3rd Cross Street
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

[சி-4270]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.

**பொருள்:**
கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும், ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2288
10 - 04 - 1990
த. பெ இலக்கம் 25


## காணி பகிர்ந்தளிப்பும் திட்டமிட்ட குடியேற்றமும்

காணி இல்லாதவர்களுக்குக் காணி பகிர்ந்தளிக்கும் ஜனாதிபதியின் தீவிர திட்டத்தின்கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணி பகிர்ந்தளிக்கும் பணி இப்போது தொடங்கப்பட்டுள்ளது. அந்தச் செய்தியைப் படித்ததும், கடந்த புதன்கிழமை நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா ஆற்றிய உரை ஆழமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகள் யாவும் திறமை அடிப்படையிலும், இனவிகிதாசார அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டது. அரசியல் அடிப்படையிலோ தனிநேச அடிப்படையிலோ இனித் தொழில் வழங்கப்படமாட்டாது. காணி பகிர்ந்தளிப்பதிலும் இதே கொள்கை அமுல் செய்யப்படும். சுமார் பத்து லட்சம் ஏக்கர் காணியை, எட்டு லட்சம் குடும்பங்களுக்கு இந்த வருடத்திற்குள் பகிர்ந்தளிக்கத் திட்டமிட்டுள்ளது— இவ்வாறு ஜனாதிபதியின் உரை அமைந்துள்ளது.

உண்மையாகவே ஓர் அங்குல நிலம் தானும் சொந்தமாக இல்லாதவர்களுக்கு, குடும்ப நிலைமையைப், பூரணமாகப் பரிசீலனை செய்து காணிகளை வழங்குவதே திறமை — தகுதி — அடிப்படையானதாகும். அதிகாரிகள் தர்மத்தின் வழி நின்று, நியாய சிந்தையுடன், கறைபடியா மனதுடன் தகுதி அடிப்படையில் காணிகளைப் பகிர்ந்தளிக்க நினைத்தால், அவ்வாறு செய்யலாம். அது முழுக்க முழுக்க அதிகாரிகளைப் பொறுத்தது. கஷ்டமான, சிக்கலான விஷயம் என்று சொல்வதற்கில்லை,

இனவிகிதாசாரப்படி காணிகளைப் பகிர்ந்தளிப்பது என்பது மிகவும் சிக்கல் நிறைந்ததும், பல பிரச்சினைகளை உருவாக்க வல்லதுமாகும். இதுவிடயத்தில் திட்டவட்டமான, கொள்கையும் நடைமுறைகளும் அவசியம்.

காணி பகிர்ந்தளித்தல் இன விகிதாசாரப்படியே எனப்படும்போது, அது சம்பந்தமாக இன்னும் சரியான தெளிவு இல்லாமல் காணி பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக எந்தத்திட்டமானாலும் அதுகுறித்து மக்கள் சரியாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். அதிகாரிகளுக்கு மேலதிகாரிகள் அனுப்பும் வெறும் சுற்று நிருபப் பாணியில் இருந்துவிடக்கூடாது.

காணி பகிர்ந்தளித்தல், ஒருகுறிப்பிட்ட மாவட்டத்தின் அல்லது பிரதேசத்தின் மக்களைப் பாதிக்கும் வகையில், இனவிகிதாசாரம் என்ற பேரில் திட்டமிட்ட குடியேற்றங்களாக அமைந்துவிடக்கூடாது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும் தமிழர் குடிசனச் செறிவைக் குலைக்கும் விதத்திலோ அல்லது அவர்களை சிறுபான்மையாக்கும் விதத்திலோ இனவிகிதாசாரம் என்ற பொதுச் சொல்லுக்கு அர்த்தம் கற்பிப்பதாகக் காணிப் பகிர்வுத் திட்டம் இருந்து விடக்கூடாது.

திருகோணமலை, அம்பாறை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஆறு தமிழர் மாவட்டங்களும் திட்டமிட்ட குடியேற்றத்தால், தமிழர்களின் தாயகம் கபளீகரம் செய்யப்பட்டு ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளன.

மலையகத்திலும் கிராம மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழர்களின் காணிகள் பறிபோயும், பல்லாண்டு காலமாக. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசங்களிலிருந்து வேறு இடங்களுக்கு வெளியேற்றப்பட்டும் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டுள்ளார்கள்.

மிக விசேடமாக, திருகோணமலை, திட்டமிட்ட குடியேற்றத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் மாவட்டமாகும். அது சிங்களவர் மாவட்டமே என்று வாதாட இடம்தரும் வகையில், அங்கு 35 சதவீதம் சிங்கள மக்கள் இப்போது வாழ்கிறார்கள். திருமலை மாவட்டத்தின் விஸ்தீரணத்தில் அரைவாசியையும் சேருவலத் தொகுதியாக்கித் திட்டமிட்ட குடியேற்றம் நடந்திருக்கிறது.

அவ்வாறு, ஏனைய மாவட்டங்களையும் மாற்றும் விதத்தில், குடியேற்றங்களை நடத்துவதற்கு வகை செய்யும் நோக்கத்தையுடையதாகவே ஜனாதிபதி கூறும் இனவிகிதாசார அடிப்படையிலான காணிப் பகிர்ந்தளிப்பும் அமையுமோ? திட்டமிட்ட குடியேற்றத்துக்கு மறுபெயர் தான் இனவிகிதாசாரப்படி காணி பகிர்ந்தளித்தலோ...?

தமிழ் மக்களின் பிரச்சினையில் அத்திவாரமாக அமைவது அவர்களின் தாயகத்தை பாதுகாப்பது. திட்டமிட்ட வெளியார் குடியேற்றங்களுக்கு முடிவு கட்டுதல் அதில் முக்கியமானது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் இன்னும் பூரணமாகவில்லை. அதற்கு முன்னர் காணிப் பகிர்ந்தளிப்பில் இனவிகிதாசாரம் என்ற பேச்சு ஏன் வர வேண்டும்?

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திலும் குடியேற்ற விவகாரம். சரியாகக் கையாளப்படாமல் தேசிய காணிக் கமிஷன் அது இது என்று திருப்திகரமாகத் தீர்க்கப்படாது தட்டிக் கழிக்கப்பட்டது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த போதே கிழக்கில் குடியேற்றமும் நடத்தப்பட்டது!

இத்தகைய பின்னணியில், குடியேற்ற விவகாரம், அதனோடு பின்னிப்பிணைந்த காணி பகிர்ந்தளித்தல் ஆகியன குறித்து தீர்க்கமான, திருப்தியான தீர்வு ஒன்று காணப்படுதல் அவசியம்.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

தெல்லிப்பளை [illegible] தார பயிற்சி நிலையத்தில் இருந்து பயிற்சியை முடித்து வெளியேறும் 92 பயிற்சியாளர்களுக்கு நாளை 11 ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிராமிய சுகாதார உதவியாளர்களாக 64 பேரும், சுகாதார தரிசிப்பாளர்களாக 28 பேரும் அன்றைய தினம் பதவியேற்று வெளியேறுவர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் 11 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் தெல்லிப்பளை சமூக சுகாதார பயிற்சி நிலையத்தில் நடைபெறும். [இ-2]

## யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரந்தன் கிளை மே மாதம் அளவில் திறந்து வைக்கப்பட உள்ளது.

ஆண்டு 1, ஆண்டு 2 ஆண்டு 3க்கான மாணவ, மாணவிகளே முதலில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் என்று பரந்தன் கிளை அதிபர் தெரிவித்தார். (இ-2)

● கம்பியூட்டர் கல்வி பெறும்

# வலது குறைந்த மாணவர்களுக்கு சுவீடிஷ் நிறுவனம் 'சீடா' உதவி

யாழ்ப்பாணம், ஏப். 9

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் கம்பியூட்டர் கல்வி பெறும் வலது குறைந்த மாணவர்களுக்கு உதவி வழங்க சுவீடன் கூட்டு நிறுவனமான 'சீடா' முன் வந்துள்ளது.

முதற் தடவையாக திறந்த பல்கலைக்கழகத்தில் யாழ். பிராந்திய நிலையத்தில் வலது குறைந்த மாணவர்கள் கம்யூட்டர் கல்வி பெற அனுமதிக்கப்படவிருக்கின்றனர்.

இந்தப் பயிற்சி நெறியில் சேரும் மாணவர்களுக்காகும் கல்விச் செலவை சீடா நிறுவனம் முழுமையாக வழங்குவதுடன், போக்குவரத்துச் செலவாக மாதம் 400 ரூபாவையும் வழங்கும் என திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவி நிர்வாகி திரு. ஈ. கருணாகரன் உதயனுக்கு தெரிவித்தார்.

கம்யூட்டர் பயிற்சிநெறிக்கு வழமையை விட இம்முறை 300க்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

# சுவரொட்டி விளம்பரங்கள் தவிர்க்கப்பட வேண்டும்

-தனியார்கல்விநிறுவனங்களுக்குகோரிக்கை-

யாழ்ப்பாணம் ஏப் 10

பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவரமுன் அடுத்த கட்டகற்கை நெறிக்கான வகுப்புக்களை நடத்துவதையும் இந்நோக்கில் சுவரொட்டி மூலம் விளம்பரம் செய்வதையும் தனியார் கல்வி நிறுவனங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

யாழ். தனியார்கல்விநிறுவன ஒன்றியம் கடந்த வெள்ளியன்று நடத்திய நிர்வாக சபைக் கூட்டத்தில் சகல தனியார்கல்வி நிறுவன இயக்குனர்களுக்கும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தும் ஆசிரியர்களுக்கும் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதன்படி, ஜீ. சீ. ஈ. உயர்தர 92 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான வகுப்புக்கள் இவ்வாண்டு நடைபெற்ற ஜீ.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பின்பே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

சுவர்கள் விடுதலைப் போராட்ட வரலாற்றை சித்தரிக்கத் தொடங்கியுள்ள இக்காலகட்டத்தில் அதற்கு இடையூறாக விளம்பரச் சுவரொட்டிகள் அமையக்கூடாது.

இவ்வாறு அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வழிபாட்டு மண்டபம்

யாழ்ப்பாணம் ஏப்ரல்10

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள் பாடசாலைக்கு வழிபாட்டு மண்டபம் ஒன்றைக் கட்டிக் கொடுக்க முன் வந்துள்ளனர். இம்மண்டபத்துக்கான அடிக்கல்லை கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரமும், திறந்த வெளி அரங்குக்கான கட்டட அடிக்கல்லை முன்னாள் கல்வித்திணைக்கள கணக்காளர் திரு. நா. திருநாவுக்கரசுவும் நட்டார்கள். (க)

## சங்கீத சபையின் சான்றிதழ் வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

வடஇலங்கைச் சங்கீத சபை நடத்திய 1989 ஆம் ஆண்டு ஆறாந்தர பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்றோருக்கு நாளை 11 ஆம் தேதி பிற்பகல் 4 00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இத்தினத்தில் மாணாக்கர் கல்லூரி மண்டபத்துக்கு வருகை தந்து சான்றிதழ்களைப் பெற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ)

திருமலை மாவட்டத்தில்

## 100 குடும்பங்களுக்கு தலா ரூ. 50,000 நஷ்டஈடு

கொழும்பு, ஏப்.10

திருகோணமலை மாவட்டத்தில் தீவிரவாதவன்செயல்களால் பாதிக்கப்பட்ட சுமார் 100 குடும்பங்களுக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

இம் மாதம் 12 ஆம் திகதி இந்த நஷ்டஈடு, புனரமைப்பு புனர்வாழ்வு நிதியில் இருந்து வழங்கப்படும் என்று திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கே. பி. விஜேக்கூன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் இந்த நஷ்டஈட்டைப் பெறுகின்றனர். (இ-எ)

## கரைவலை சீசன்

வெற்றிலைக்கேணி, ஏப்.10

கடந்த காலங்களில் இந்திய அமைதிப்படையின் ரோந்து, தேடுதல் போன்ற நடவடிக்கைகளால் பெருஞ்சிரமங்களுக்குள்ளாகிய கரைவலை மீனவர்கள் இவ் வருடம் மிகுந்த உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

## முல்லைத்தீவில்

மாங்குளம் ஏப் 10

முல்லைத்திவு மாவட்டத்தில் புனர்வாழ்வு புனரமைபுத்திட்டத்தின் கீழ் வீடமைப்பதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இம்மாவட்டத்தில் 324 குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவுகள் முல்லைத்தீவு இலங்கை வங்கி மூலம் நேற்று முதற்கட்டமாக வழங்கப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதி 48 குடும்பங்களுக்கு மாங்குளம் மக்கள் வங்கி மூலமாகவும் இக்கொடுப்பனவு வழங்கப்படும். 372 குடும்பங்களுக்கு மொத்தமாக 20 இலட்சம் ரூபா வழங்கப்பட இருப்பதாக முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி. எம். விஜயகுமார் உதயனுக்குத் தெரிவித்தார். (இ-94)

ஜீ.சி ஈ. பரீட்சை மீளாய்வு:

## காலம் பிந்திய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

கொழும்பு, ஏப்ரல் 10

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்யக்கோரி காலம தப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்று பரீட்சை ஆணையாளர் ஆர் தர்வேதமுல்ல தெரிவித்தார்.

சுமார் 10 ஆயிரம் பரீட்சார்த்திகள் பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்யக்கோரி விண்ணப்பித்துள்ளனர்.

விரைவாக மீளாய்வை முடித்து பல்கலைக் கழக அனுமதிக்கான பட்டியலைத் தயார் செய்ய பரீட்சை முடிவுகளை பல்கலைக் கழக மானியக் குழுவுக்கு அனுப்பி வைக்க வேண்டியிருக்கிறது.

இதனால் தான் காலந்தப்பிய மீளாய்வு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளமுடியாதிருப்பதாக பரீட்சை ஆணையாளர் சொன்னார். (இ – எ)

## வேலணை முடிப்பிள்ளையார் மகா கும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம் ஏப் 10

வேலணை மேற்கு பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோவிலில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவிருக்கின்றது.

கும்பாபிஷேகம் முன்னிட்ட நிகழ்ச்சிகள் இம்மாதம் 5 ஆம் திகதி முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இன்று காலை 8 மணிக்கு விக்னேஸ்வர பூசையும் 9 மணி முதல் மாலை 3 மணி வரை தைலாப்பியங்கமும் நடைபெறும். நாளை புதன் கிழமை காலை 6 மணிக்கு விக்னேஸ்வர பூசை யாகசாலைப் பிரவேசம் என்பனவும் அதன்பின் காலை 9 மணி 7 நிமிடத்துக்கு மேல் உள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகமும் நடைபெறும்.

ஊரெழு சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார், நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் என்போரது மேற்பார்வையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெறும்.

நாளை நடைபெறும் கும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் தனித்துவம் பேணவே தற்போதைய உடை

### யாழ். மாவட்ட அமைப்பாளர் ராஜன் உரை

யாழ்ப்பாணம், ஏப் 10

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களும் இராணுவ உடையிலேயே நிற்கிறார்கள். இது ஏன் என பலர் வினவுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்லுகிறேன். இது ராணுவ உடை அல்ல. நாம் ராணுவ வீரர்களும் அல்லர். நாம் உங்கள் பிள்ளைகள். சுதந்திர போராட்ட வீரர்கள். எமது செயல்பாடுகள் தனித்துவமானவை. அந்த தனித்துவத்தை பேணுவதற்காகவே இந்த உடையை நாம் அணிந்துள்ளோம்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

மறைந்த தேசாபிமானி திரு. திருஞானசேகரத்தின் 'புதியதோர் உலகம் செய்வோம்'' என்ற கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் திரு. ராஜன் உரையாற்றினார்.

விழா ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புத்தூரில் உள்ள மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் வலிகாமம் பொறுப்பாளர் செல்வி வானதி தலைமை வகித்தார்.

நூல் பிரதியை இறந்த போராளியான சோல்ட் முரளியின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை வெளியிட்டு வைக்க நூல் ஆசிரியரின் தாயாரான திருமதி முருகேசு முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

நூல் பற்றி கவிஞர் திரு. முருகையன் ஆய்வுரை நிகழ்த்தினார்.

ராஜன் தொடர்ந்து பேசுகையில்; அந்நிய ராணுவம் அடக்குமுறையில் ஈடுபட்டு அட்டூழியம் செய்தபோது உறுதியுடனும், நெஞ்சுரத்துடனும் பேனாவின் வலிமையை காட்டியவர்கள் பலர். அவர்களில் திருஞானசேகரமும் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பொறுப்பாளர் செல்வி சித்திரா தனது உரையில் கவிஞர்களும் அவர்களது செயற்பாடுகளும் எமது மக்களின் விடிவுக்காக உணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும் என்றார்.

திரு. பொன் பூலோகசிங்கம், திரு. ரைசன், செல்வி மணிமேகலை, திருவாளர்கள் சுந்தசாமி, குகன், இளைய குட்டி ஆகியோரும் உரையாற்றினர். (இ-9)

## சமய சிந்தனையில்

### தாவடியில் புதுவருடத்தன்று தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம்ஏப் 10

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகராலய வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகிறது.

புதுவருடத் தினமான எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 30 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். [ஒ]

## நாணய மாற்று விகிதம்

06-04-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 232.31 | 233 28 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.20 | 4002.75 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுன்ட் | 6561.41 | 6585 02 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2352.92 | 2369 19 |
| 100 | பிரெஞ்சு பிராங் | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 25.3229 | 25.5019 |

## வாசகர் திருமுகம்

### பாலங்கள் திருத்தப்படவில்லை

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருத்தித்துறை—சாவகச்சேரி போக்குவரத்து சேவை இந்திய இராணுவத்தினால் தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் இப்பகுதி மக்கள் பிரயாணம் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

இப்பொழுதுஇந்திய ராணுவம் போய் இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அவர்களால் உடைக்கப்பட்ட பாலங்கள் இரண்டும் திருத்தப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ராஜா
கப்புதூ.

### நீதி கிடைக்குமா?

பலாலி விமான நிலையத்துக்கு அருகில்உள்ள விவசாயிகளின் நிலங்களையும் குடியிருக்கும் நிலங்களையும் 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு வரையும் கமம் செய்ய விடாமலும் குடியிருக்க விடாமலும் அதிகாரத்தில் இருந்தவர்கள் தடுத்து வைத்திருந்தார்கள்.

இந்த நிலங்கள் எல்லாம் பொது மக்களுடைய காணிகள். இவற்றுக்கு எந்தவிதமான நஷ்ட ஈடும் வழங்கப்படவில்லை. இப்பகுதிப் பொதுமக்களில் பலர் அகதிகளாய் வேறு ஊர்களில் தங்கியிருக்கிறார்கள்.

இப்பொழுது மயிலிட்டி லடக்கில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. குடியிருப்புக் காணிகளையும் விவசாய நிலங்களையும் எமக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுமா? எமக்குநீதி கிடைக்குமா?

மு. சிவசுப்பிரமணியம்
மயிலிட்டி வடக்கு
விவசாயிகள் சங்கம்.

## இஸ்லாம் கூறும் பெண் இனம்




''கன்னிப் பெண்ணை அவளது அனுமதி இன்றி விவாகம் செய்து வைத்தல் ஆகாது'' என நபி (ஸல்) அவர்கள் அறிவுரை நவின்றார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ''நற்குணமுள்ள மனைவியே ஒருவருக்கு ஒப்பில்லாப் பெருஞ் செல்வமாகும்''

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:- ''பழங்கள், இனிய பதார்த்தங்கள் முதலிய இன் பண்டங்களை ஒருவர் தம் இல்லத்திற்கு கொண்டு வந்தால், முதலில் அவைகளை தம் பெண் மக்களுக்கே கொடுத்து அவர்களைச் சந்தோசப்படுத்தி வைப்பாராயின், அவர் தனது இறைவனைப் பயந்தொழுவதற்குள்ள அறிகுறியாகும்''.

''உங்களில் எவரும் தமது மனைவியை அடிமையை அடிப்பது போன்று அடித்து விட்டு, பிறகு (அன்று) பகல் கழிந்ததும் அவளுடன் உடலுறவு கொள்ளத் தயாராகி விடுவது கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆண்டுக்கு 30 லட்சம் பேர் புகைப்பதால் உயிரிழப்பர்

## உலக சுகாதார மாநாட்டில் எச்சரிக்கை

பெர்த், ஏப்ரல் 9
இன்று உயிரோடிருக்கும் நூறு கோடிப் பேரில் அரைப் பங்கினர் சிகரெட் புகைப்பதால் மரணமடைவர்.

ஆஸ்திரேலியாவில் பெர்த்தில் ''புகைத்தலும் சுகாதாரமும்'' என்ற தலைப்பிலான ஏழாவது உலக மாநாட்டில் முன்கண்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உலக சுகாதார ஸ்தாபனத் தலைவர் ரிச்சர்ட் பெட்ரோ மேலும் பேசுகையில், உயிரிழப்பவர்களில் 20 கோடிப் பேர் குழந்தைகளும் இளைஞர்களும் ஆக இருப்பர் என்று தெரிவித்தார்.

''1990 முதல் அடுத்து வரும் பத்து ஆண்டுகளில் ஆண்டுக்கு 30 லட்சம் பேர் சிகரெட் புகைத்தலால் உயிரிழப்பர்'' - என்றும் அவர் சொன்னார்.

(எ

# அரசியல் கட்சிகள் மீதான தடையை நேபாள மன்னர் நீக்கினார்!

## நெருக்கடிக்கு தீர்வுகாணும் சமரச முயற்சி தோல்வி

காத்மண்டு ஏப் 9
அரசியல் கட்சிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நேபாள மன்னர் பிரேந்திரா நேற்று நீக்கி விட்டார்.

இது சம்பந்தமான மன்னரின் உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியானதும் நாடு எங்கும் எதிர்க் கட்சி ஆதரவாளர்கள் வெற்றி விழாக் கொண்டாடினர்.

ஊடரங்குச்சட்டத்தை மீறி வெளியே வந்து வெற்றியைக் கொண்டாடியோர் மீது காத்மண்டுவில் வைத்து பொலீஸார் சுட்டனர். அப்போது ஆறு பேர் மரணமடைந்னர்.

இதனிடையில் -
பல கட்சி ஜனநாயக முறை கோரி நேபாளத்தில் நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டம் தீவிரமடைந்து உள்ளது.

எதிர்ப்புக் கிளர்ச்சிகளை நடத்தும் நேபாள தேசிய காங்கிரஸ் தலைவர்களுடன் பேச்சுகள் நடத்த நேபாளத்தின் புதிய பிரதமர் பகதூர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

பஞ்சாயத்து முறையைக் கலைத்து இடைக்கால அரசு ஒன்றை ஏறபடுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்திருப்பதனால் நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் காலவரையறை அற்ற ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவம் சுட்டதில் 6 பேர் உயிரிழந்தனர்.

இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுகின்றனர்.

இதனிடையில் - நேபாளம் செல்வதைத் தவிர்க்கும்படி தனது பிரசைகளை அமெரிக்க அரசு கேட்டுள்ளது.

சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து எதிர்க் கட்சித் தலைவர்களுடன் பேச்சுக்களை உடனே ஆரம்பிக்கும்படி அமெரிக்கா நேபாள அரசைக் கேட்டுள்ளது.

1972 இல் தற்போதைய மன்னர் பிரேந்திரா சிம்மாசனம் ஏறினார். அதன் பின்னர் மன்னர் எதிர் நோக்கியுள்ள மிகப்பெரும்நெருக்கடி இது என்று வர்ணிக்கப்படுகிறது. (எ)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மரியாம்பிள்ளை செல்வத்துரை**
(இளைப்பாறிய M.S.O. ஓவ்வீஸ்ஷர் யாழ் தபால் கந்தோர்)

பிறப்பு: 29 - 09 - 1913
இறப்பு: 10 - 04 - 1989

அன்புத் தந்தையே! எங்களை விட்டுப்பிரிந்து இறைவனடி சேர்ந்து, நான்கு நாளையால் எனது அன்புத் தம்பியையும் உம்மோடு சேர்த்துக்கொண்டீர்! நானும் அம்மாவும் ஒருவரும் அற்ற அனாதைகளாக தவிக்கின்றோம்.

அன்பு மனைவி: — செ. பாக்கியம்,
அருமை மகள்: — செ. சகுந்தலாதேவி.

நம்பர் 8, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (12293)

# சோவியத் யூனியனில் பெண்கள் நிலைமை

மாஸ்கோ, ஏப். 9
1917 ஆம் ஆண்டிற்குப் பிறகு ரஷ்யாவில் பெண்களுக்கு உரிமைகள் ஆண்களுக்கு சமமாக வழங்கப்பட்டன.

தொழில் துறை முயற்சிகளிலும் பெண்கள் புரட்சிக்குப் பின்னர் கூடுதலாக பங்கெடுக்க ஆரம்பித்தனர்.

யுத்த காலத்தின்போது அதிகமான ஆண்கள் யுத்த களத்திற்குச் சென்றவேளை பெண்கள் ஆயுதத் தொழிற்சாலையில் கடமைபுரிந்தனர்.

யுத்தம் கோடி ரஷ்யர்களை (ஆண்களை) பலிகொண்டது.

இதனால் இந்த இடங்களில் (இறந்தவர்கள் கடமை புரிந்த இடங்களில்) பெண்கள் கடமை செய்ய ஆரம்பித்தனர்.

கணிப்பீடுகளின் பிரகாரம் சோவியத் நாட்டின் பொருளாதார முயற்சி நடவடிக்கைகளில் 50க்கும் அதிமானோர் பெண்கள், 10 : 6 என்ற விகிதம் உயர்கல்வி பெற்றவர்கள் பெண்களாவர்.

டாக்டர்களில் 80 சத விகிதமானோரும் பெண்கள். வேலை செய்யும் நேரங்களிலும் பெண்களே கூடுதலான இடத்தை வகிக்கின்றனர்.

70 சத வீதமான சோவியத் பெண்கள் திருமணத்திற்குப் பின்னர் தமது துறையில் விசேஷப் பயிற்சி பெற தவறுகின்றனர். இதனால் அவர்கள் 25 சத வீதமான சம்பளத்தைக் குறைவாகப் பெறுகின்றனர்.

குடும்பப் பொறுப்புள்ள பெண்களுக்குத் தமது குடும்ப விவகாரங்களைக் கவனிக்கவும் விசேஷ சலுகைகள் அரசாங்கத்தினால் செய்துகொடுக்கப் படுகின்றன (எ)

## லத்வியா நிலைப்பாடு

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடனான தொடர்பை துண்டிக்க பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லத்வியாவில் கம்யூனிஸ்ட் கட்சியும் நடவடிக்கை எடுத்துள்ளது. (எ)

# அரபாத்தின் அமைதி முயற்சி; ஜிம்மி கார்ட்டர் பாராட்டு!

பாரிஸ் ஏப்ரல் 9
பிரெஞ்சுத் தலை நகரில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்தை கடந்த புதன்கிழமை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் சந்தித்துப் பேசினார்.

2½ மணித்தியாலங்களாக இப்பேச்சுக்கள் நடந்தன.

அதன் பின்னர் செய்தியாயர்களிடம் ''மத்திய கிழக்கில் சமாதானத்தைக் கொண்டு வர அரபாத் தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகிறார் என்று ஜிம்மி காட்டர் பாராட்டினார்.

இதற்கு முன்னர் திரு. கார்ட்டரும், ஜனாப் அரபாத்தும் ஒன்றாக பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரண்டைச் சந்தித்துப் பேசினார்கள். (எ)

# ஆசிரியர் தலையங்கம் இல்லாத கொலம்பியா பத்திரிகைகள்

பொகொடா ஏப்ரல் 9
போதைவஸ்துக் கடத்தல்காரர்கள் விடுத்த பயமுறுத்தல் காரணமாக கொலம்பியாவில் வெளியிடப்படும் பத்திரிகைகள் அனைத்தும் ஆசிரியர் தலையங்கம் எழுதுவதை நிறுத்திக் கொண்டன.

கருத்துச் சுதந்திரத்தை அரசு உத்தரவாதம் செய்யும் வரை, ஆசிரியர் தலையங்கம் எழுதப்படமாட்டாது என்று பத்திரிகை உரிமையாளர்கள் அறிவித்து விட்டனர்.

போதைவஸ்துக் கடத்தலுக்கு எதிராக எல் எஸ்பெக்ரடோர் பத்திரிகை தீவிர பிரசாரம் மேற் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

## படகு தீப்பற்றி 150 பேர் பலி!

ஒஸ்லோ, ஏப்ரல் 09
நோர்வேக்கு அருகே வட கடலில் பயணிகள் படகுப் பாதை ஒன்று தீப்பிடித்ததில் 150க்கு மேலானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

300 பேர் காப்பாற்றப் பட்டனர். தீப்பற்றியபோது இப்படகு ஒஸ்லோவில் இருந்து டென்மார்க் நோக்கிச்சென்று கொண்டிருந்தது. (எ)

# 5ஆவது பிறந்ததின வாழ்த்து



**★ போல் டிலக்ஷன் ★**


கரணவாய் தெற்கைச் சேர்ந்த அன்ரன் நிர்மலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் போல் டிலக்ஷன் தனது 5வது பிறந்தநாளை இன்று (10-04-90) தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சுவிஸ் அன்ரா, சித்தப்பா, கர்ணன் சித்தப்பா, றோசா அன்ரா, சந்திரா அன்ரா, ஜசிந்தா மாமி, ஜெயா மாமி, நாதர் சித்தப்பா, ஜீவாச்சித்தப்பா, தீபன் அண்ணா, மாமாமார், மாமிமார், அன்ராமார், அண்ணாமார், மைத்துனிமார், மைத்துனர்மார், மற்றும் உறவினரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

[3147]

# 90 ஆம்நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திரு.
**பொன்னுத்துரை புவனேந்திரன்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

வியனுலகம்: 07 - 03 - 1929
விண்ணுலகம்: 12 - 01 - 1990

திதி: 10 — 04 — 1990

செத்தும் சிவலோகம்
சேர்ந்துவிட்ட திருமகனைப்
பத்தும் பலர் சொல்லப்
பாவி நாம் கேட்டிருந்து
சுத்தும் மௌனத்தில்
இத்துன்பம் மாறிடுமோ

உடற் கூற்று வலிமைதனை
உவப்புடனே எடுத்துரைத்த
கடற்காற்றுப் போன்றோ நீர்
கலகாத மலைந்து நின்றீர்
மாணவர்கள் மத்தியிலே
மதிப்புடனே வாழ்ந்திருந்து
பேணியவர் உடல் நலத்தைப்
பிரிய முடன் பாதுகாத்தீர்
பன்னிரண்டும் ஒன்றும்
தொண்ணூறும் சேர்ந்ததன்று

பட்டப் பகலிலே
வெட்டவெளி யினிலே
முட்டாத பசு மோதி
முடிந்ததோ உன் வாழ்வு.

இன்று 10 - 04 - 90 எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி. [12260]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட

## பயிலுநர் ஆசிரியருக்கு 16 ஆம் திகதி முதல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 10
கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவான பயிலுநர் ஆசிரியர்களுக்கு சேவைக் காலப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

பயிலுநர் ஆசிரியர்களுக்கு 9 நாள் சேவைக்காலப் பயிற்சி வழங்கப்படவேண்டும். எனினும் முதல்கட்டமாக மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயத்தில் இப்பயிற்சி நடைபெறும் (ஒ-9)

## மாந்திரீகர்கள் பட்டியல் தயாரிப்பதில் அரசு முயற்சி

கொழும்பு ஏப் 10
நாட்டில் உள்ள சகல மந்திரவாதிகள் மாந்திரீக நிபுணர்களின் பட்டியல் ஒன்றை அரசு தயாரிக்கவுள்ளது.

இவர்கள் தங்கள் பெயர்களை சுதேசிய வைத்தியத் துறை அமைச்சில் பதிவு செய்து கொள்ள வலியுறுத்தும் திட்டம் ஒன்றை, இந்த அமைச்சுக்குப் பொறுப்பான திட்ட அமைச்சர் எச். பி. வன்னிநாயக்கா தயாரித்து இருக்கிறார்.

நோய்களைக் குணமாக்குவதற்கு பயன்படுத்தப்படும் பாரம்பரிய மாந்திரீக முறையை வளர்த்துக் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் அமைச்சர் சொன்னார்,

பதிவு செய்த மாந்திரீக நிபுணர்களின் பெயர்கள் துண்டுப் பிரசுரமாக வெளியிடப்படும். அத்துண்டுப் பிரசுரங்கள் வெளி நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் வெளி நாட்டார் மத்தியிலும் விநியோகிக்கப்படும்.

மாந்திரீக நிபுணர்கள் தற்போது கடைப்பிடிக்கும் முறையை மேலும் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சொன்னார். (உ-எ)

## டாக்டர் பற்றாக்குறையை நீக்க தாதிகளுக்கு பயிற்சி!

### சுகாதார அமைச்சரின் புதிய திட்டம்

கொழும்பு, ஏப். 10
சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ள நோயாளர்களை சத்திர சிகிச்சைக்கு முன்னர் உணர்விழக்கச் செய்வது (Anaesthetisation) சம்பந்தமான துறையில் தாதிகளுக்கும் பயிற்சி அளிக்கப் படவுள்ளது.

உணர்விழக்கச் செய்யும் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நீக்குமுகமாகவே, தாதிகளுக்கு இப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளதாக சுகாதார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரத் தாதிமார் சம்மேளனத்துடன் பேச்சுக்கள் நடத்திய பின்னரே இம் முடிவு எடுக்கப் பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். (உ-எ)

## வெற்றிலைக்கேணி வரை பஸ் சேவை நீடிக்கப்படும்

வெற்றிலைக்கேணி ஏப்10
எதிர் வரும் புத்தாண்டிலிருந்து, யாழ்ப்பாணம் ஆழியவளை பஸ்சேவை, வெற்றிலைக்கேணிவரை நீடிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் வெறறிலைக் கேணி மக்களின் நீண்டகாலச் கோரிக்கை நிறைவேறுகிறது.

நீண்டகாலமாக குண்டும் குழியுமாக விழங்கிய ஆழியவளைச்சந்திக்கும் வெற்றிலைக்கேணிக் சந்திக்கும் இடயிலான வீதி அப் பகுதி மக்களினால் சிரமதான அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது. (இ-ரி)

### வேலணை ....

பாபிஷேகத்தன்று நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கப்பன் கழக அமைப்பாளர் திரு .இ. ஜெயராஜ் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் விசேஷ நாதஸ்வர, மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.


# கம்பியூட்டர் கல்வி

**Diploma in Data Processing and Computer Programming in BASIC Language**

ஆரம்பம்: 11 April 1990 3.30 p.m
(திங்கள், புதன், வெள்ளி)
15 April 1990 11.00 a.m
(சனி, ஞாயிறு)

**LOTUS 1-2-3**
ஆரம்பம்: 10 April 1990 9.00 a.m

**DBASE III +**
ஆரம்பம்: 21 April 1990 9.30 a.m

**COBOL**
ஆரம்பம்: 12 April 1990

G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம். மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.




**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, Power House Road, 2nd Lane, JAFFNA.


# வடக்கு - கிழக்கிற்கு விசேட பரீட்சை சபை

## மாகாண கல்வி அமைச்சு நிறுவும்

திருகோணமலை, ஏப். 10
ஒன்பதாம் ஆண்டுக்கு மேற்பட்ட உயர்தர வகுப்புக்களுக்கான பரீட்சைகளை நடத்த பரீட்சைசபை ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நியமிக்கவுள்ளது.

இத்தகவலை அமைச்சின் செயலாளர் திரு.இ.ஜே. சற்குணராஜா தெரிவித்தார்.

ஆங்கிலம், தமிழ், சமூகக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆகிய ஐந்துபாடங்கள் சம்பந்தமான பரீட்சைகளையே இந்த சபை மேற்பார்வை செய்யும்.

9, 10, 11 ஆம் ஆண்டுகளுக்கான பரீட்சைகள் மாகாண மட்டத்தில் வடபிராந்தியம் கிழக்குப் பிராந்தியம் ஆகிய பிரிவுகள் ரீதியாக நடத்தப்படும்.

இப்பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் பிராந்திய ரீதியில் தயாரிக்கப்பட்டு இறுதி அங்கீகாரத்துக்காக மாகாணசபையின் பரீட்சை சபைக்குச் சமர்பிக்கப்பட வேண்டும்.

பிராந்திய ரீதியில் பரீட்சைகள் நடத்தப்பட்டாலும் வினாத்தாள்கள் தொகுக்கப்படுவது மாகாண மட்டத்தில் சமசீரான முறையில் அமைய வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜீ.சி.ஈ. உயர்தர எகுப்புப் பரீட்சைக்கான வினாத்தாள் தாயாரிப்பு வேலைகளை சேவைக்கால வள அதிகாரிகள் கவனித்துக் கொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## திருமலைக்கு மற்றும் ஒரு பஸ்

யாழ்ப்பாணம் ஏப். 10
திருமலைக்கு மேலும் ஒரு பஸ்ஸைசேவையில் ஈடுபடுத்த வடபிராந்திய போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

திருமலைக்கு தினமும் காலையில் 5.45க்கு ஒரு பஸ் சேவை நடாத்தப்பட்டுவருகிறது. அதே போன்று காலை எட்டு மணிக்கு மேலும் ஒரு பஸ்ஸை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் மட்டக்களப்புக்கு இரு பஸ்கள் காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வதாகவும், விரைவில் கல்முனைக்கும் ஒரு பஸ் சேவை நடாத்தப்படவிருப்பதாகவும் போக்குவரத்து சபை அதிகாரி தெரிவித்தார். (இ-3)

### கிழக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்பாளர் திரு. காஸ்ட்ரோ ஆகியோரும் பங்குபற்றினர்.

நேற்றிரவு நடைபெற்ற பேச்சுக்களின்போது கிழக்கு மாகாண நிலைமை, அங்கு கூட்டாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், குடியேற்றப் பிரச்சினை ஆகியவை உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (-உ)

### யாழ். பஸ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதிபர்.

பி. ப. 4.05 மணி:- கடந்த கால வன்செயல்களினால் உயிர் நீத்தவர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி.

பி. ப. 4.10 மணி:-வரவேற்புரை — காரைநகர் சாலை முகாமையாளர் திரு. செ. பிரான்ஸிஸ் சேவியர்.

பி. ப. 4. 20 மணி:- தலைமையுரை — போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு, சி. கனகரத்தினம்.

பி. ப. 4.30 மணி:-பேச்சு— தொழிலாளர் சார்பில் திரு. எஸ். வேலாயுதம்.

பி. ப. 4.35 மணி:-பேச்சு— தொழிலாளர் சார்பில் திரு. எஸ். வசந்தகுமார்.

பி. ப. 4.40 மணி:-பேச்சு— தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர்.

பி. ப. 4 50 மணி:-பேச்சு— மாணவர்கள் சார்பில் செல்வி வனஜாராணி கண்ணுத்துரை.

பி. ப. 5 மணி:- பேச்சு — கௌரவ விருந்தினர்: திரு. ஈ. சரவணபவன்.

பி.ப. 5 15 மணி:-பேச்சு— பிரதம விருந்தினர் திரு. அன்ரன் அல்பிரட்.

சிறந்த தொழிலாளர்களுக்கு திருமதி. யூலியட் அன்ரன் அல்பிரட் பரிசில்களை வழங்குவார். நற்சான்றிதழ்களை யாழ் றோட்டறிக் கழகத் தலைவர் வழங்குவார்.

அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்ளுக்குரிய பரிசுகளை திருமதி. யசோதை சரவணபவன் வழங்குவார்.

பி. ப. 6 மணி:- நன்றியுரை — யாழ் சாலை முகாமையாளர் திரு: சு. மணிவாசகன்.

அடுத்து வ. பி. போ. ஊழியர்கள் அளிக்கும் ஓரங்க நாடகமும், ராஜன் குழுவின் பொப்பிசையும் நடைபெறும்.

நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின் சகல இடங்களுக்கும் செல்வதற்குரிய பஸ் சேவைகளும் ஏற்பாடு [illegible] டுள்ளன. [illegible]

### ரஞ்சன்---

(1 ஆம் பககத் தொடர்ச்சி)
வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று நாடு சீரழிந்து போயிருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாண சபை கூட்டப்படுமா இல்லையா என்ற சர்ச்சையை விட நாடு ஐக்கியப்பட்டு இருக்குமா, இல்லையா என்ற சர்ச்சைக்கே பொறுப்பு உணர்ச்சி வாய்ந்த சகல அரசியல் வாதிகளும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

அந்தரங்கசுத்தியுடன் இன, மத, சாதி, கட்சி பேதங்களை மறந்து உடனடியாகத் தீர்வுகாண வேண்டிய ஒரு சிக்கலான காலகட்டத்திலே நாடு சிக்கியிருக்கிறது.

தேசிய ஐக்கியம் சிறுபான்மை மக்கள் மீது திணிக்கப்பட வேண்டிய ஒன்றல்ல.

#### பெரும்பான்மையினர் கடமை

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் மகிழ்சியாக சிறுபான்மை மக்களை வாழ வைக்க வேண்டியது பெரும்பான்மை மக்களின் அரசியல் வாதிகளின் முக்கிய கடமையாகும்.

பதவியில் இருப்பதற்கோ அல்லது மீண்டும் பதவிக்கு வருவதற்கோ சிறுபான்மையினரின் தேசிய உரிமைகளை ஒரு காரணியாக மாற்றுவது 21 ஆம் நூற்றாண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் உலக வரலாற்றில் மிகவும் அநாகரிகமான செயலாகும்.

உடனடியாக இலங்கையின் தேசிய ஐக்கியத்தை உறுதிப்படுத்த, எந்தவிதமான நிபந்தனையுமின்றி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன் வைத்திருக்கும் 19 அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தைகளை அரசு ஆரம்பிக்குமேயானால் மாகாண சபை கூடுமா, இல்லையா என்பது பிரச்சினைக்குரிய விடயமாக இருக்கிறது.

மார்ச் முதலாம் திகதி வடக்கு, கிழக்கு மாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தின் சாராம்சம் இது தான். -இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### பதவி இழந்த---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சமர்ப்பித்துள்ளனர்.

தான் முன்னர் பணிபுரிந்த ரயில்வே திணைக்களத்தில் தகுந்த பதவி ஒன்றில் தன்னை நியமிக்கும்படி கோரி திரு. பஞ்சாட்சரவேல் ஆளுநர் ஊடாக அரசுக்கு விண்ணப்பித்துள்ளார்.

திரு. வரதராஜப்பெருமாளின் செயலாளராக பணியாற்றிய டாக்டர் விக்னேஸ்வரன் 6 மாத கால லீவு கோரி செய்த விண்ணப்பத்தை ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

டாக்டர் விக்னேஸ்வரன் திரு. வரதராஜப்பெருமாளுடன் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

ஏனைய அமைச்சுச் செயலாளர்கள் பற்றிய நிலைமை இன்னும் தெரியவில்லை. (அ-உ-எ)

## பாணின் நிறையை உறுதி செய்யும்படி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப் 10
யாழ் மாவட்டத்தில் உள்ள சகலபேக்கரிக்காரர்களும் முன்னர் நிர்ணயிக்கப்பட்டபடி பாணின் நிறை 350 கிராமாக இருப்பதையும் பாணின் விலை ரூபா 4 90 ஆக இருப்பதையும் கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும்.

அத்துடன் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த சகல பேக்கரிக்காரர்களும் யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்டு இயங்க வேண்டும்.

நேற்றுக் காலை யாழ் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில்இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப் பட்டது.

சங்கத்தின் தலைவர் திரு. ரி.சுப்பிரமணியம்தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு யாழ் மாவட்டத்தை சேர்ந்த பேக்கரி உரிமையாளர்களுள் பெரும்பாலானோர் பங்குபற்றினர். [உ-5]

### விதியின் அவல நிலை

கிளாலி எழுதுமட்டுவாள் வீதி பல வருடங்களாக திருத்தப்படாமல் இருக்கும் காரணத்தால் அதில் சைக்கிள் பிரயாணமே செய்ய முடியாமல் உள்ளது

வீதியின் சீரழிந்த நிலையால் தற்போது உள்ள யாழ். கிளாலி பஸ் சேவை நிறுத்தப்படும் சாத்தியம் உண்டெனவும் இப்பகுதி மக்கள் கவலையுறுகின்றனர்.

புத்தாண்டுக் காலத்தில்

## குழப்பத்தை ஏற்படுத்த விஷமிகள் முயற்சியா?

புத்தாண்டுக் காலத்தில் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த விஷமிகள் முயற்சிப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளன.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவது என்ற அரசு தீர்மானித்து உள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா சொன்னார்.

கலவரம் இடம் பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் பிரதேசங்களில் உள்ள பாதுகாப்புப் படையினர் உஷார்ப் படுத்தப் பட்டிருக்கின்றனர் என்றும் அமைச்சர் சொன்னார். (ஒ-9)

# மக்கள் சேவை அமைப்பாக ப. நோ. கூ. ச. இயங்க வேண்டும்

## நேற்றைய கலந்துரையாடலில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 10
'தமிழ்மக்களின்போராட்ட வரலாற்றில், தொய்வான காலகட்டமாக விளங்கும் இன்றைய நிலையில் இலாபம் தேடும் நோக்கத்தோடு ப. நோ. கூ. சங்கங்கள் இயங்குகின்றன, இந்நிலையை மாற்றி மக்களுக்காகச் சேவை செய்யும் அமைப்பாக இயங்க வேண்டும்'.

இப்படிக் கோரிக்கை விடுத்தார்விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்டான்லி டொமினிக்.

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் நேற்று மாலை மனோகரா தியேட்டரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்'

திரு. ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவு நிறுவனங்களில் தனிப்பட்ட சுயநல அடிப்படையில் கடமை புரிபவர்களால் ஊழல்நிறைந்த அமைப்பு என்ற அவப்பெயர் ஏற்படுகிறது. இந்நிலை மாற்றப்படவேண்டியது அவசியம்.

நாம் இந்த விடயத்தில் தலையிடவேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில் நிறுவனங்கள் மனச்சாட்சியின்படி நடக்கவேண்டும்.

சோஷலிசம்தான் நல்ல சித்தாந்தம் என்ற கோட்பாடு தோல்விகண்டதுபோல, கூட்டுறவுதான் மக்கள் வாழ்வுக்கு நன்மையானது என்ற சித்தாந்தம் தோல்வியடையக் காரணமாக இருக்காதீர்கள்.

கூட்டுறவு என்பது பொருள்களை வாங்கி விற்கும்நிறுவனமாகச் செயற்படாமல் உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர் திரு. க. சிவபாலனும் ப. நோ. கூ சங்கப் பிரதிநிதிகள் பலரும் உரையாற்றினர். (ஒ-3)

### மானெலுக்கு இடமாற்றம்

தகவல் திணைக்கள இயக்குநர் திருமதி மானெல் அபயரத்ன இடமாற்றம் செய்யப்பட்டார்.

பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டு விவகார அமைச்சுக்கு இவர் இடமாற்றம் செய்யப் பட்டார்.

அவரின் சொந்த விருப்பத்தின் பேரிலேயே இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

### மோட்டார் சைக்கிள் விபத்துக்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல். 10
யாழ் நகரப்பகுதியில் நேற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் இடம் பெற்றன.

கடந்த ஒருவாரமாக நகரப்பகுதியின் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் பெருமளவு அதிகரித்துள்ளன.

நேற்று ஆரியகுளம் சந்தியில்சடுதியாகப் போடப்பட்ட ''பிரேக்'' காரணமாக மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து வந்தவர் கீழே விழுந்து காயமடைந்தார். காயமடைந்தவர் கொக்குவிலைச் சேர்ந்த ந. கருணாதேவி (வயது50).

வெலிங்டன் சந்தியில் மோட்டார் சைக்கிளும் மினிபஸ்ஸூம் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்த கொட்டடியைச் சேர்ந்த கந்தையா-நடராசா (வயது 57) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளானார். (இ-6)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**திருமதி மகாலட்சுமி துரைச்சாமி**
அவர்கள்

மலர்வு: 28 – 5 – 1922
உதிர்வு: 26 – 3 – 90

எங்கள் அருமைத் தாயே!
எங்களை அன்புடனும் நேர்மையுடனும் பாசத்துடனும் நல்வழி காட்டி வளர்த்து கண்ணை இமை காப்பதுபோல் காத்த உங்கள் புன்னகை தவழும் இன் முகத்தை மறப்போமா! வாழ்வில் எந்நாளும்

அன்னாரின் வீட்டுக் கிருத்திய அழைப்பு (11- 4- 90) புதன்கிழமை பூநாரி லேன் கொக்குவிலில் நடைபெறும். அன்று மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மகன் ஜெயப்பிரகாஸ் (பத்தர்),
மகள்மார், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்,

பூநாரி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (12186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியகால சேவையில் உற்ற நண்பன்!

★ பிரேதப் பெட்டிகள்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்
★ குழியுள் பிரேதம்இறக்கும் 'டிவைஸ்'
★ ஊர்வல ஊர்திகள்

பிறைற் ஹவுஸ்

(சென். ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

10 - 04 - 1990 செவ்வாய்க்கிழமை

உங்கள் இல்ல உபசரணை வைபவங்களைச் சிறப்பிக்க எம்மை நாடுங்கள்!

தகரப்பந்தல்கள், கதிரைகள், பீங்கான், கிளாஸ் வகைகள் மலிவுவாடகைக்குப்பெற

பிறைற் ஹவுஸ்

(சென்: ஜேம்ஸ் ஆலய அருகே)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# வடக்கு - கிழக்கில் துரிதமாக நிவாரணம் வழங்கும் வேலை!

## யாழ். மாவட்டத்துக்கு ஒரு மாதத்தில் ரூ. 7கோடி!

திருகோணமலை, ஏப். 10 வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

இத்தகவலை வடக்கு-கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஒருமாத காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிவாரணம் வழங்குவதற்காக மாகாணசபை ஏழு கோடி ரூபா பணத்தை வழங்கியிருக்கிறது.

இப்பணம் மீளக்குடியமர்த்தல், உற்பத்தி ஊக்குவிப்பு, வீடுகள் புனரமைத்தல் ஆகிய வற்றுக்காக வழங்கப்பட்டு வருகிறது.

போதிய நிதி இன்மையால் நிவாரணம் வழங்கப்படுவது தாமதமாகவில்லை.

கொடுபபனவு வேலைகளை மேற்கொள்ளுவதில் நிலவும் நிர்வாகச் சிக்கல்கள் போன்ற சில கஷ்டங்களால் தான்நிவாரணம் வழங்கும் வேலை தாமதமாகின்றது என்றும் திரு. கணேசநாதன் தெரிவித்தார். (உ-எ)

# புலிகள் மக்கள் முன்னணி யாழ்நகரில் மேதின விழா

யாழ்ப்பாணம், ஏப் 10 விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் மேதினத்தை தொழிலாளர் எழுச்சி நாளாக கொண்டாட முடிவு செய்துள்ளனர்.

வட மாகாணத்தில் உள்ள சகல அமைப்புத் தொழிலாளர்களையும் அங்கம் வகிக்கும் வகையில் மாபெரும் எழுச்சி தினமாக இந்த மே தினத்தை கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறுதொழிலாளர் அமைப்புகளையும் ஒன்றிணைத்து மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தவும் மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். (ஒ-3)

### கொழும்பு செட்டியார் தெருவில்

# நகைக்கடையை கொள்ளையிட தமிழ் இளைஞர்கள் முயற்சி!

## மூவரைப் பொலிஸார் பிடித்தனர்

கொழும்பு, ஏப். 10 கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக்கடை ஒன்றைக் கொள்ளையிட ஆயுதம் தரித்த நான்கு இளைஞர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

கடந்த வியாழன் இரவு7-30 மணியளவில் நான்கு தமிழ் இளைஞர்கள் அந்தக் கடைக்குட் புகுந்து இரும்புப் பெட்டியின் திறப்பைக் கேட்டனர். திறப்பு உரிமையாளரிடம் இருந்தது. ஆனால் உரிமையாளர் கடையில் அவ்வேளை இருக்கவில்லை. அதனால் அங்கு நின்ற உரிமையாளரின் காரை நால்வரும் கடத்திக் கொண்டு சென்றனர்.

மீண்டும் உரிமையாளரைத் தேடி அந்த நால்வரும் காரில் கடைக்குவந்தபோது, தகவல் கிடைத்து அங்கு காத்து நின்ற பொலிஸார் நால்வரில் மூவரைக்கைதுசெய்தனர்.

காருடன் கடத்திச் செல்லப்பட்ட கடை ஊழியர் ஒருவரையும் பொலிஸார் மீட்டனர். (உ-எ)

### சார்க்மாநாட்டை எங்கே நடத்துவது?

# பிந்திய நிலைப்பாடு குறித்து இலங்கைக்கு தகவல் இல்லை!

கொழும்பு, ஏப். 10 சார்க் உச்சிமாநாட்டை எப்போது எங்கே நடத்துவது என்பதுபற்றிய தற்போதைய நிலைப்பாடு இன்னும் இலங்கைக்குத் தெரிவிக்கப்படவில்லை.

சார்க் அமைப்பின் தற்போதைய தலைவரான பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ இதுபற்றிய தகவலை இலங்கைக்கு இன்னமும் அனுப்பவில்லை.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் கொழும்புக்கு இரண்டு வாரங்களுக்குமுன் விஜயஞ்செய்து ஜனாதிபதியுடன் சார்க் மாநாடுபற்றிப் பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போது ஏப்ரல் மாதம் உச்சி மாநாட்டை கொழும்பில் நடத்த இலங்கை அரசு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது தெரிந்ததே. [உ-எ]

### மாகாண அமைச்சர்கள் மூவர்

# நாட்டை விட்டு வெளியேற ஜனாதிபதி அனுமதி கோரினர்

திருகோணமலை, ஏப் 10 நாட்டை விட்டு வெளியேறியதாகக் கூறப்படும் வடக்கு, கிழக்கு மாகாணசபை அமைச்சர்களுள் மூன்று பேர் கடந்த பெப்ரவரி மாதம் கடைசி வாரத்தில் விடுமுறையில் வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் அனுமதி கேட்டதாக தெரிய வருகிறது.

ஆனால் அவர்களது கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துவிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலக வட்டாரங்கள் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தன.

மாகாணசபையின் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்கள் வெளிநாடு செல்வதாயின் அதற்கு முன்னர் ஜனாதிபதியின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்பது பொது விதியாகும்.

இதற்கு அமைய வெளிநாடு செல்வதற்கு அமைச்சர்கள் திரு. பி கிருபாகரன், ஜனாப் எம். அபுயூசுப், திரு. ராஜரட்ணம் ஆகிய மூவரும் ஜனாதிபதியின் அனுமதியைக் கோரியதாகத் தெரிய வருகிறது.

அதே வேளை முதலமைச்சர் திரு.ஏ. வரதராஜப்பெருமாளும், திரு. ஜோர்ஜ் செனவிரத்ன ஆகிய இருவரும் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஏதும் எழுதவில்லை என்றும் தெருவிக்கப்பட்டது. (உ)

**OBITUARY**

**XAVIER CONSTANTINE**

Xavier Constantine (Retired Seience Master, St. Patrick's College, Jaffna) expired in Nigeria on 4 - 4 - 90.

He was the beloved husband of Sashini (Nigeria) loving father of Mahendra alias Chutta (London), Subo, Delan, Deline (Nigeria), beloved son of the Late Mr. & Mrs. P. J. Constantine and brother of the late Theresa, Julia, Basil, Belle, Charlotte (Malaysia), Poomani Anne, Lennie and Rev. Dr. Bennett Constantine (U. S. A.)

The funeral took place in Nigeria.

Informant:
Mrs. Belle Sebastiampillai
8, Cathedral Street,
JAFFNA.

(3162)

# நினைவுச் சின்னம் அமைக்க முன்னரே தொடர்பு கொள்க!

## புலிகளின் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10 வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு நினைவுச் சின்னம் அமைக்க விரும்புவோர் அனைவரையும் தருமபுரத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு தமிழீழ மக்கள் நிலையான நினைவுச் சின்னங்களை அமைக்க விருப்புற்றிருக்கிறார்கள்.

எதிர்காலத்தில்மக்கள் அவர்களைஎண்ணிப் பார்க்க வேண்டும் என்றும்ஏற்றிப் போற்ற வேண்டும் என்றும் எதிர்காலத் தமிழீழத்தின் எழுச்சிக்கும்அவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் எண்ணுவது சரியே.

நிறைந்த பேரன் போடு வளர்த்த பிள்ளைகளைக் களத்தில் இழந்த பெற்றோர் அவர்களுக்கு நினைவுச்சின்னங்களை எழுப்பியாவது ஆறுதல் பெற நினைக்கிறார்கள்.

நாளைய தமிழீழத்துக்கும் வழிகாட்டிகள் இவர்களே என்பதால் இந்த மாவீரர்களின் நினைவைந் போற்ற வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாகவே உள்ளோம்.

ஏறக்குறைய 1400 விடுதலைப்புலிகள் இதுவரை வீரமரணமடைந்தார்களே-இவர்களை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழீழ மண்ணில் உயிர் நீத்த விடுதலைப் புலிகளுக்கு இன்று தனித்தனியாக நினைவுச் சின்னங்கள் எழுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல நினைவுச் சின்னங்களுக்கு சிந்தலாய் சிதறலாய் செலவு செய்யும் பணத்தை எல்லா வீர வேங்கைகளையும் நினைவு கொள்ளும் விதத்தில் ஒரு நினைவு மண்டபமாய் நினைவுச் சின்னமாய் எழுப்பப் பயன்படுத்துதல் நன்றல்லவா?

அது மட்டுமல்ல.

நகர்ப்புறங்களில், நெரிசலான இடங்களில், தெருச் சந்திகளில் நினைவுத் தூண்கள் நடப்படுகின்றன.

பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் தொல்லை என்றால் அதற்கான பொறுப்பையும் எமதியக்கமே ஏற்க வேண்டியுள்ளது.

எனவே தான்—

நினைவுச் சின்னங்களை அமைக்கவிரும்புவோர் அனைவரையும் முன்னணியின் தலைமைச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சையில்

# முன்னணி வகித்த மாணவருக்கு சேமிப்பு கணக்குச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10 யாழ். மாவட்டத்தில் ஜி. சி. ஈ உயர்தர பரீட்சையில் 4 'ஏ' பெற்ற 14 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான சேமிப்புக் கணக்குச் சான்றிதழ் வழங்கப்படவிருக்கிறது.

யாழ் மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறும் தேசிய போக்குவரத்து தின விழாவில் வைத்தே இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

ஷப்றா - உதயன் நிறுவனங்களின் ஆதரவுடன் வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடாத்தும் இந்த விழாவில் சேமிப்புக் கணக்குச் சான்றிதழ்கள் பெற இருக்கும் மாணவர்கள் விவரம் வருமாறு:.

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி. கிருஸ்ணகுமார் (பொறியியல்), எஸ். சுரேஸ் குமார் (பொறியியல்), ஸ்கந்தன் (மருத்துவம்), என். கெங்காதரன் (மருத்துவம்) ஆகியோர்.

யாழ்- வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வனஜாராணி கண்ணுத்துரை (மருத்துவம்), சீதா தாமோதரம்பிள்ளை [மருத்துவம்] ஆகியோர்.

சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்த துஷ்யந்தா திசநாயகம் (பொறியியல்) சுபநேசன் நடேசபிள்ளை (மருத்துவம்) ஆகியோர்.

யாழ்- மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே. சத்தீஸ்காந்தன் (பொறியியல்).

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜே.எஸ். ஸ்பொன்ஸ் புறூறி (மருத்துவம்).

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி.வரகுணன் பொறியியல், கே. அமிர்தகுமார் (பொறியியல்), கே. சிவராமன் (மருத்துவம்) ஆகியோர்.

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த வாசுகி கணபதிப்பிள்ளை (மருத்துவம்).

இவர்களுக்கு மில்க்வைற் ஸ்தாபன உரிமையாளர் திரு. கனகராசா புத்தகப் பரிசில்களையும் வழங்குவார். (அ - 3)

# மாங்குளத்தில் உண்ணா நோன்பு

மாங்குளம், ஏப். 10 மாங்குளத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னை பூபதிக்கு உண்ணாநோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாநோன்பை முன்னிட்டு மாங்குளத்தில் கடைகள், தேனீர் கடைகள், மதுபானக் கடைகள் மூடப்பட்டிருந்தன. (இ-94)

### அன்னை பூபதி நினைவாக

# திருமலையில் கூட்டங்களும் தொடர் உண்ணாவிரதமும்

## இன்று மூன்றாம் கட்டடையில்

யாழ்ப்பாணம், ஏப். 10 அன்னை பூபதி நினைவாக திருகோணமலையின் பல பகுதிகளிலும் பொதுக் கூட்டங்களும், தொடர் உண்ணா விரதங்களும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை 3 ஆம் கட்டையிலும், நாளை 11 ஆம் திகதி உவர் மலையிலும், 12 ஆம் திகதி பாலையூற்றிலும் பொதுகூட்டங்கள் நடைபெற உள்ளன.

15 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை திருமலை சிவன் கோவிலடியில் தொடர் உண்ணா விரதமும் அனுஷ்டிக்கப்பட இருக்கிறது.

### மீனவர் பிரச்சினை:

# விசாரிக்க அமைச்சரை கலைஞர் அனுப்பினார்

சென்னை, ஏப். 10 இலங்கையில் இருந்து திரும்பிய புதுக்கோட்டை மீனவர்களைச் சந்தித்து விவரங்களை அறிந்துகொள்ள மீன்வளத் துறை அமைச்சர் டாக்டர் சந்திரசேகரனை புதுக்கோட்டை செல்லுமாறு முதலமைச்சர் கருணாநிதி பணித்திருக்கிறார்.

இத்தகவலை திரு. கருணாநிதி நேற்று சட்டசபையில் தெரிவித்தார்.

மீன்வளத்துறை அமைச்சரிடமிருந்து விவரங்கள் கிடைத்த பின்னரே புதுக்கோட்டை மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன் பிடித்தது சம்பந்தமான விவரங்களைத் தெரிவிக்க முடியும் என்றும் முதலமைச்சர் சொன்னார்.

இலங்கை கடற்பிராந்தியத்தில் 107 படகுகளில் வந்து மீன் பிடித்ததாகக் கருதப்படும் 514 தமிழக மீனவர்களை விடுதலைப் புலிகள் தடுத்து வைத்த பின்னர் கடந்த ஞாயிறன்று விடுவித்தனர் என்பது தெரிந்ததே. [உ-எ]

# சாவகச்சேரியில் சேமிப்பு வங்கிக்கிளை

சாவகச்சேரி ஏப் 10 தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளை நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு: உருத்திரா நவரத்தினராசா மங்கள விளக்கேற்றி கிளையை திறந்து வைத்தார். (இ-31)

### அதிபர் பதவி உயர்வுக்கான

# நேர்முகப் பரீட்சைகள் 16 ஆம் திகதிக்குப் பின்னரே

யாழ்ப்பாணம், ஏப். 10 முதலாம், இரண்டாம்தர அதிபர்பதவிகள்உயவுர்க்கான நேர்முகப்பரீசைகள் எதிர் வரும் 16ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதிவரை நடைபெறுமென கல்விச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்திரு எஸ். பிரேமரட்ணா இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவத்திடம் தெரிவித்துள்ளார்.

அதிபர் பதவி உயர்வுக்கான கடிதங்கள் காலதாமதமாகக் கிடைத்தவர்களும் தற்போது பரீட்சை மேற்பார்வையாளர்களாக கடமையாற்றுபவர்களும் இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளும் வகையிலே திரு. மகாசிவத்தின் கோரிக்கையை ஏற்று மேற்படி திகதிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்தபடி ஏப்ரல் 10ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை நேர்முகப் பரீட்சைகள் நடைபெற மாட்டா என்று திரு. பிரேமரட்ணா தமக்கு அறிவித்திருப்பதாக திரு. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 10 இன்று செவ்வாய்க்கிழமை கந்தரோடை ஒட்டன்கட்டு ஞானவைரவர் கோவிலில் சங்காபிஷேகமும் இதைத் தொடர்ந்து பகல் அன்னதானமும் நடைபெறும். (க)

# மரண அறிவித்தல்கள்

## W. G. அன்னப்பா

(இளைப்பாறிய ஆசிரியர் - மானிப்பாய் மெமோறியல்)

மானிப்பாயைச் சேர்ந்த வில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா அவர்கள் 9-4-90 அன்று காலமாகிவிட்டார், அன்னாரது இறுதி ஆராதனை பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வண. அன்னப்பா
ஜெயக்குமாரன் (மகன்)

ஆஸ்பத்திரியடி,
மானிப்பாய்.

(3164)

## குழந்தைவேலு தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய வைத்திய கலாநிதி)

புங்குடுதீவை பிறப்பிடமாக கொண்டவரும் 'சிவகுடில்' கொக்குவிலில் வாழ்ந்தவரும் இளைப்பாறிய வைத்திய கலாநிதியுமான குழந்தைவேலு தாமோதரம் பிள்ளை அவர்கள் 8-4-90 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கற்பகமணியின் அன்புக் கணவரும் கேசவநாதன் (டுபாய்), சகஸ்திரநாமம் (சுவிஸ்), லீலா (கனடா), பவானி (பிரான்ஸ்), ரோகினி (பிரான்ஸ்), காலம் சென்ற சுசிலா (சுசி), தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இராசேஸ்வரி (டுபாய்), பத்மராணி (சுவிஸ்), சிவானந்தன் (கனடா), இராசசிங்கம் (பிரான்ஸ்), நடராசசிங்கம் (பிரான்ஸ்), ஜெயகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம்சென்றவர்களான பொன்னம்பலம், தில்லையம்பலம், மாணிக்கவாசகர், மனோன்மணி, ஐயம்பிள்ளை ஆகியோரின் உற்ற சகோதரரும், இராசரத்தினத்தின் மைத்துனரும், தர்ஷா, தர்ஷன், துளசி, சிந்துஜா, கௌரி, பிரதீப், ஆர்த்தி, அபிராமி, கஸ்தூரி, சுதாகரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஆத்மசாந்தி இறுதிக்கிரிகைகள் 10-4-90 (செவ்வாய்க்கிழமை) இன்று காலை 10 மணியளவில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

'சிவகுடில்'
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில். (12184)

தகவல்:
நா. சிவபாதம்

## திரு. சுந்தரம்பிள்ளை தம்பிநடராஜா

ஐயனார்கோவிலடி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. சுந்தரம்பிள்ளை தம்பிநடராஜா [ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர் ஏறாவூர்] 9 - 4 - 90இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற சுந்தரம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலம்சென்ற அன்னலெட்சுமியின் அன்புக் கணவரும், காலம்சென்ற சோமசுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலம்சென்ற மயில்வாகனம் [வட்டுக்கோட்டை], ஆதிலெட்சுமி, விஜயலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆலாலசுந்தரம், தில்லைநாயகிதேவி, Dr. சரஸ்வதிதம்பிராசா, [R. M. O. அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பளை], இந்திராதேவி, காலம்சென்ற சீதாதேவி, சாந்தாலெட்சுமி [திட்டமிடல் பணிமனை, கச்சேரி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலம்சென்ற தம்பித்துரை, காலம்சென்ற திரு. தபிராஜா, இராமச்சந்திரன், ஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரி, உருத்திரதீசன், ரவீந்திரன், சந்திரகுமார், சிவகுமார், சிறீப்பிரியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-4-90 செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37- ஒடை ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

தகவல்:
Dr. S. சிவராமலிங்கம்.

[12187]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் ... 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 04 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org